வாழ்க தமிழ்!

வளர்க வையகம்!

சி.மா.த.ச' சங்கமம்
GCTS

மலர் 24 இதழ் 2

இதழ் மலர்ந்த நாள் : 11-15-2025




# தீபாவளி மலர் 2025



சின்சினாட்டி மாநகர தமிழ்ச் சங்கம்

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

GCTS

Since 2005

Greater Cincinnati Tamil Sangam



சி.மா.த.ச' சங்கமம்
GCTS

கல்வெட்டு முதல் கணிப்பொறி வரை...
எங்கும் எதிலும் எப்போதும் தமிழ்...
www.cincytamilsangam.org

# சங்கமம் ஆசிரியர் குழு

**ஆசிரியர்**

**பானுரேகா பரந்தாமன்**

**ஆசிரியர் குழு :**

பிருந்தா கலையரசன்

குமார் சரவணன்

ராம்மோகன் ராஜா

பாலா ராமச்சந்திரன்

பிரியதர்ஷினி விஸ்வலிங்கம்

கௌரி சின்னத்தம்பி

பிரபாகரன் அசோகன்

சக்தி சந்திரசேகர்

**வடிவமைப்பாளர்**

நவநீதன் பார்த்தசாரதி NavaTech

Publisher Website: https://www.navatech.co.in

**Postal address:**

Greater Cincinnati Tamil Sangam
Ref: Sangamam
PO BOX 180, Mason, OH 45040, USA
Email: sangamam@cincytamilsangam.org

**Disclaimer:** Sangamam (ISSN: 2643167 (print) and ISSN: 26431696 (online)) is the official magazine of Greater Cincinnati. Tamil Sangam (GCTS), a non-profit organization (501(c)(3), Employer identification number (EIN): 20-3336962), serving the Tamil speaking community in the Greater Cincinnati area. The objectives of the Sangamam are to (i) create an avenue for the Tamil community to express themselves through literature and arts, (ii) provide a platform for sharing our thoughts, views and ideas, (iii) encourage the younger generation to learn about the Tamil culture and heritage and (iv) promote Tamil language, values and traditions. This magazine is NOT FOR SALE. The magazine is free to access for all readers in its entire form. Users must NOT edit the magazine and/or reproduce any part of it.


SEAMLESS. FAST.
FOOD ORDERING.
FoodALot
Menu and meal at ease
Happy Deepavali
https://foodalot.com/
Built with in Cincinnati


plumtree
Real Estate Marketing
Sasi Reddy REALTOR®
513.445.8448
sasireddy.rre@gmail.com
SasiReddy.PlumTreeRealty.com



அன்புடையீர் ,

வணக்கம் ! இனிய தீபாவளி வாழ்த்துக்கள் !

## அனுபவச் சுவடுகள் - முதுமையின் வரிகள்...

சமீபத்தில் நான் ஒரு நிகழ்ச்சியில் ஒரு இளம் பெண்ணை சந்திக்க நேர்ந்தது. அப்பெண்ணின் மரியாதைக்குரிய, மனப்பக்குவம் என்னை வியப்பில் ஆழ்த்தியது! சக வயது பெண்கள் மத்தியில், ஒரு முதியவருடன் அவள் உரையாடியது, மற்றும் அவரை நீண்ட உணவு வரிசையில் நிற்க விடாமல்,தானே உணவுடன், தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தது... இவையெல்லாம் இந்த ஊரில், எனக்குப் புதிதாக இருந்தது. வெகு நேரம் நான் அதை ரசித்தேன்.

வயதானவர்கள் என்றாலே நிறைய பேசுவார்கள், அறிவுரைகள் கூறி சோதிப்பார்கள் என்ற எண்ணம் நம்மில் பலருக்கு இருக்கும். ஆனால் அவர்கள் கடந்து வந்த பாதை, வாழ்வின் லட்சியம், தன்னம்பிக்கை, நிர்வாகத்திறன், இவற்றை நாம் நினைவு கூர்வதில்லை.

“முதியவர்களுடன் நட்பு வளர்க்காத இளைஞன் வேரற்ற மரத்தைப் போன்றவன்” -
இது ஒரு ஆப்பிரிக்க பழமொழி.

குழந்தைகள் பார்க்கும் பொழுது வயதானவர்களை கேலி செய்வது, மற்றும் குறைத்துப் பேசுவது, அவர்களை வெகுவாகக் கவர்ந்து, இப்படிச் செய்வது சரிதான் என்று நினைக்க வைக்கும். வயதாகிவிட்டால் அவர்கள் வாழ்வு முடிந்துவிடுவதில்லை, அவர்களுக்கும் பொழுது எப்போதும் போலத்தான் விடிகிறது.

வாழ்வு ஒரு நொடி -
கண்ணிமைப்பதற்குள் இளம் வயதினரை முதியவராக்கி விடும். எனவே பெரியவர்களை மதித்து அன்பு செய்வோம், அவர்களின் அனுபவம் பேசும் மொழியை, பொறுமையோடு கேட்போம்!

**அன்புடன்,**



# என் நெஞ்சிற்கு இனிய...

**சோனியா அங்குராஜ்**



GCTS தமிழ்ப்பள்ளியில் பெற்றோராகத்தொடங்கி 7 ஆண்டுகள் உதவி மற்றும் ஆசிரியையாக, பின் கடந்த 3 ஆண்டுகளாக முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் எனக்கு மறக்கமுடியாதது. தமிழ்ப்பள்ளியில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்.தமிழ் மொழி, பண்பாடு மற்றும் சமூகத்துடன் இணைந்து செயல்பட முடிந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.





தமிழ்ப்பள்ளி என் மனதிற்கு மிக நெருக்கமானது. குழந்தைகள் மத்தியில் நேரம் செலவிடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். அவர்களுடன் இருப்பது எனக்கு எப்போதும் ஒரு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. பள்ளியில் வேலை செய்யும் ஒவ்வொரு நாளும் எனக்குப் புதிதான அனுபவம் மற்றும் நம்பிக்கையை அளித்தது. ஒவ்வொரு வாரமும் புதிய சவால்கள் எனக்காக காத்திருக்கும். அனைத்தையும் சக ஆசிரியர்களுடன் சேர்ந்து கடந்து வந்தோம்.

இந்த வாய்ப்பை எனக்கு அளித்த திரு.சரண் தங்கவேலு GCTS தமிழ் பள்ளியின் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றி. இந்தப் பயணத்தில் பல புதிய நண்பர்களைப் பெற்றேன், குறிப்பாக பெற்றோர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்களுடன் நல்ல உறவு உருவானது. அவர்களது ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் இது சாத்தியமாகி இருக்காது. பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் திரு.சீதாராம் ராமசந்திரன், உதவி ஆசிரியர்கள், மற்றும் உயர்நிலை பள்ளி மாணவர்கள் என அனைவரும் சேர்ந்து தமிழ்ப்பள்ளிக்கு பணியாற்றியது என்றும் என் நினைவில் இருக்கும்.

சிறு முயற்சியாக உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்பட்டறையை அறிமுகம் செய்தோம். ஒவ்வொரு வருடமும் திருமதி.சுபாஷினி கார்த்திகேயனின் உதவியுடன் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. புதிய பாடத்திட்டத்தை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தோம். உயர்நிலை மாணவர்கள் இருமொழி முத்திரை (BiliteracySeal) பெற்றார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில்10 மாணவர்கள், 8 நிலைகளை முடித்து பட்டம் பெற்றுள்ளனர்.

# என் நெஞ்சிற்கு இனிய...



GCTS தமிழ்ப்பள்ளியின் ஒரு பகுதியாக இருந்தது என் வாழ்க்கையில் ஒரு சிறப்பான அனுபவம். இதற்கு உறுதுணையாக இருந்த என் இரு மகன்களுக்கும் எனது கணவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

GCTS தமிழ்ப்பள்ளி மேலும் பல மாணவர்களுக்கு தமிழை கற்றுத்தந்து வளரவேண்டும் என்று வாழ்த்துகிறேன். எப்படியாவது அடுத்த தலைமுறைக்கு நம் மொழியையும் திருக்குறளின் சிறப்பையும் கடத்தி விடுவோம்.

"We rise by lifting others" - Robert Ingersoll.

"மற்றவர்களை உயர்த்தும் போது நாமும் உயருகிறோம்." இந்த வாய்ப்பை எனக்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தமிழ்ப்பள்ளி வளர்ச்சி என்பது அனைவரின் கூட்டு முயற்சியே.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"-



**Best Wishes**
**To Tamil School**

# NARWAL

YOU FIRST!

Narwal is a niche technology services company helping fortune 1000 companies. Narwal's services will provide a significant competitive advantage to our customers, creates value and meaningful outcomes. Narwal does this by fostering trusted relationships with customers, giving individualized attention, and delivering personalized solutions through passion, commitment and expertise.

We believe in the promise of the future. We believe that the innovation in technology is bringing a disruptive change in the business ecosystem and its crucial for businesses to adapt to these changes to stay relevant. In their pursuit of digital transformation, most companies want to implement everything. They are lured by the idea that implementing everything will make them move up faster.

We beg to differ.

With years of experience in the industry, working with hundreds of companies and entrepreneurs, we have realized that the core determinants of your company's success in digitalization depends, in fact, on three key factors – Automation, Data & Analytics and Cloud. We aim to help companies realize the true potential of their businesses through innovative and agile processes, to deliver greater value to their customers.

Create an Exciting Future with us:

We're always looking for people who are passionate about technology, creating value and making an impact. This is your opportunity to build great things and influence as technology is driving the exponential change.

We currently have openings in Automation & Data & Analytics fields. Are you determined to continuously upskill, Join us !


Interested candidates can share their resumes tocareers@narwalinc.com

Location: Cincinnati, OH    Work Authorization: Open to all

Narwal page:www.narwalinc.com

LinkedIn page: https://www.linkedin.com/company/narwal-inc/?

வெற்றிஇளவல் ஆர்த்தி பிரியா



## துணைவி

**‘ஒட்டாத ஒரு வார்த்தை**

**ஒட்டியே உயிரெடுக்கும்**

**சுகமான ஒரு தொல்லை…’**

## அப்பா

‘தன் கரத்தை
தலையணை ஆக்கி
தரையில் கிடந்தென்னை
ஆளாக்கிய உனை
மெல்லணையில்
படுத்திருந்து
ஆராதிக்கிறேன்,
அவ்வோர்வார்த்தை
மந்திரம் அப்பா!...

# வாயில் தோறும் வள்ளுவம்

**வித்யா சுந்தரராஜன்**



திருக்குறள் ஏன்?- குறள் எப்போதும் எனக்கு ஒரு ஆச்சரியம் தான். அனைவரைப் போலவும் மனப்பாட பகுதியாக வெறுக்கப்பட்ட குறள் இன்று எப்படி என்னை தினந்தோறும் வாசிக்க வைத்தது?

உங்களுக்கும் கூட அந்த மாற்றத்தை கொடுக்கலாம் என்ற நோக்கில் இதோ:

உலகத்தின் முதல் ட்விட்டர் யார் தெரியுமா?. முதன் முதலில் அதிக ட்வீட் போட்டது யார் தெரியுமா? நம் வள்ளுவர் தான்.

ஆய்வுகளின்படி, ஒரு மனிதன் ஒரு சமயத்தில் 7 வார்த்தைகள் தான் நினைவில் கொள்ள முடியும். ஆங்கிலத்தில் அதற்கு “Magical Seven” என்று சொல்வார்கள். இதை எங்கு கற்றாரோ?

திருவள்ளுவரின் தொலை நோக்கு நம்மை எப்போதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும். இது ஒரு உலக பொதுமறையென்பது தெரிந்ததே, கடவுளை பற்றி குறிப்பிட்டாலும் அவர் எப்போதும் பாதம், தாள் என்று இறைவனின் கால்களை மட்டுமே சொல்லியிருப்பார். முகத்தைப்பற்றி சொன்னால், எப்படியும் ஏதாவது ஒரு கடவுளை குறித்துவிடும் என்பதனால் தானோ?.

நேற்றுபடித்த செய்தித்தாளை இன்று படிக்க முடியாத போது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இன்றைக்கும் வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும் உள்ளது.

திருக்குறளை, மதநூலாகவோ, காப்பியமாகவோ மாற்ற முயற்சி நடந்தது, அது நடக்கவில்லை, ஏன், மற்ற நூல்கள் தர்மத்தை பற்றி பேசிய போது, குறள் அறத்தை பற்ற பேசியது. தர்மமும் அறமும் ஒன்று இல்லையா? இல்லை, நாலு பேருக்கு நன்மை செய்தால் எதுவும் தவறில்லை என்பது தர்மம், அரசே ஆனாலும், தவறிழைத்தால் நாண வேண்டும் என்பது வள்ளுவம். தர்மம் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். அறம் அனைவருக்கும் பொதுவானது. தர்ம நூல்கள் சூழ்ச்சியையும், தந்திரத்தையும் இலை மறை காயாக கூறியபோது, அனைத்து குறள்களிலும் அறனை வலியுறுத்துகிறார்.

வர்ணாஸ்ரமப்படி மக்களைப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தபோது, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (குறள்: 972) என்று உலக தத்துவத்தை முன் வைக்கிறார்.


## காந்தியும் திருக்குறளும்:

லியோ டால்ஸ்டாய் , "Free Hindustan" பத்திரிக்கைக்கு ஒரு கடிதம் எழுதுகிறார், அதில் இன்னாசெய்யாமை பற்றி ஐந்து குறள்களை மேற்கோள் காட்டுகிறார். இதை காந்தி படித்து "இன்னா செய்தாரை ஒறுத்தல் (குறள் 314) என்பதில் ஈர்க்கப்படுகிறார். காந்தியின் அறவழிப்போராட்டத்திற்கு திருக்குறளும் ஓர் காரணமாக இருந்திருக்கலாம் .
இந்திய குடும்பங்களில் பெண்களை புனித பிம்பத்திற்குள் அடைத்து, பெண் என்பவள் எப்போதும் குடும்பத்திற்க்காக மட்டுமே சிந்திக்க வேண்டும் என்று வரையறுத்துள்ளோம்.
ஆனால் பெண்ணியவாதியாக வள்ளுவர் "தற்காத்து" (குறள்: 56) கொள் ..என்று " ஸெல்ப் கேர்", " மீ டைம்" என்று உலக பெண்களுக்கே முன்னோடியாக விளங்குகிறார்.

எந்த நீதி நூலும் எக்காலத்துக்கும் பொருந்தாது, உதாரணமாக, இதுவரை எங்குமே பணத்தை சேர்த்துக்கொள் என்று குறிப்பு இல்லை. வள்ளுவர் "சைக்காலஜி ஆப் மணி" தெரிந்திருக்கிறார் போலும்" செய்க பொருளை (குறள் 759) என்று ஜென் ஆல்பா வரை டிப்ஸ் சொல்லிவிட்டு போயிருக்கிறார்.

ஒரு அரசன் எப்படி இருக்க வேண்டும், ஒரு மருத்துவன் என்ன செய்ய வேண்டும், தலைவன் எப்படிப் பட்டவனாக இருக்கவேண்டும், விவசாயி யார் என்று அனைவருக்கும் அறனை வலியுறுத்தியிருக்கிறார்.

ஒரு கருத்து, ஒரு கேள்வி, அதற்கான பதில் என்று மூன்றையும் எழுசீரில் சொல்லி , மினிமலிஸ்டாக திகழ்கிறார். (குறள்:127)
கருத்து::யாகாவா ராயினும் நாகாக்க (நாவை அடக்கா விட்டால்)
கேள்வி:காவாக்கால் (கேட்காவிட்டால்)?
பதில்:: சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (அந்த வார்த்தையே உனக்கு துன்பத்தை கொண்டு வரும்)
குறளில் உள்ள சொற்கள் இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது, இதில் தமிழின் செழுமையை கண்டு வியப்பதா குறளின் நீட்சியை வியப்பதா?




திருக்குறளும் காதலும் என்று தனி புத்தகமே எழுதமுடியும். இறுதியாக பாரதிதாசனின் "துன்பம் நேர்கையில்" பாடலோடு முடிக்கிறேன்.

அறமிதென்றும் யாம் மறமிதென்றுமே
அறிகிலாத போது - யாம்
அறிகிலாத போது - தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா? - நீ
இயம்பிக் காட்ட மாட்டாயா?

அறம் எதுவென்று தெரியவில்லையா - திருக்குறளைப் படி, உன்னை வழிநடத்தும் என்கிறார் புரட்சிக் கவிஞர்.
ஒவ்வொரு வங்காளி வீட்டிலும் ரபீந்தரநாத் தாகூர் கண்டிப்பாக இருப்பார், அது புத்தகமாகவோ, படமாகவோ இருக்கலாம். நாமும் வாயில் தோறும் வள்ளுவரை கொண்டு செல்வோம். ஒரு குறளில் தொடங்குவோம்....

# தீபாவளி வண்ண கலவைகள்

ஸ்ரீராம் பிரபாகரன்



# நானும் என் மகள் கௌசிகாவும்

சின்னா பாலா



நானும் என் மகள் கௌசிகாவும்...

(உண்மையான உணர்வுபூர்வமான உரையாடல்)

ஒரு நாள், என் மகள் கௌசிகாவின் ஓவியப் பயிற்சி முடிந்து அவளை

வீட்டிற்கு அழைத்து வந்து கொண்டிருந்தேன்.

அப்போது அவள் சிரித்தபடி தந்தையர் தின வாழ்த்துக்களை

தெரிவித்தாள்.

நான் மகிழ்ச்சியுடன் "நன்றி, கௌசிகா" என்றேன்.

அதே சமயத்தில் சிரித்தபடி நான் ஒரு கேள்வி கேட்டேன் —

"நான் இல்லையென்றால், நீ என்ன செய்வாய்?" என்று.

அவள் சிறிது யோசித்து அமைதியாக பதிலளித்தாள்:

1️⃣ "நாம் வசிக்கும் வீட்டிற்காக நீங்கள் எடுத்த கடன் இன்னும் அடைக்கப்படவில்லை, அதை அடைக்க பணம் தேவை."

2️⃣ "நாம் இப்போது வாழும் வாழ்க்கையை தொடர பணம் தேவை."

3️⃣ "நானும் என் தம்பியும் நல்லபடியாக சம்பாதிக்க குறைந்தது ஒரு இளங்கலைப் பட்டம் படிக்க வேண்டும்."

4️⃣ "இதற்கெல்லாம் எங்களுக்கு பணம் தேவை, அப்பா."

அவளின் பதிலைக் கேட்டவுடன் நான் ஒரு நிமிடம் மௌனமாகி விட்டேன். அந்தச் சிறிய வயதில் அவள் காட்டிய பொறுப்புணர்ச்சி என்னை ஆச்சரியப்படுத்தியது. நான் பெருமை அடைந்ததுடன், என் உள்ளத்தில் ஒரு உணர்வு எழுந்தது —

நான் ஏற்கனவே என் குடும்பத்திற்கான பாதுகாப்பை (Protection) ஏற்படுத்தியிருந்தேன், ஆனால் கௌசிகா சொன்ன வார்த்தைகள் எனக்கு மேலும் உணர்த்தின —

என் குடும்பத்தின் எதிர்காலம் இன்னும் வலிமையாக பாதுகாக்கப்பட வேண்டும். அந்த நாளிலிருந்து, நான் கூடுதல் பாதுகாப்பையும் சேர்த்துக் கொண்டேன்.

ஏனெனில் நான் உறுதியாக நம்புகிறேன் —

"என் குடும்பத்தின் நிதி எதிர்காலத்தை என்னைத் தவிர வேறு யாரும் கவனிக்க மாட்டார்கள்."

"என் குடும்பம் ஒருநாளும் crowd funding-ல் உதவி கேட்க வேண்டிய நிலைக்கு செல்லக்கூடாது."

எனவே, என் குடும்பத்தின் நிதி பாதுகாப்பு என் முக்கியப் பொறுப்பு. ❤️

# தனிமையில் கண்ட உண்மைகள்

பால அய்யனேஷ் வாணி சு



திடீரென விழித்த போது, அகண்ட உலகில்
தனிமையில் இருப்பதை நான் கண்டேன்.

ஆனால் என்னைச் சுற்றிலும்,
அமைதி எனும் நண்பன் சூழ்ந்திருந்தான்;
ஆகையால் நான் தனிமையை உணரவில்லை,
ஏனெனில் என்னைச் சுற்றி இயற்கை இருந்தது.

விண்ணை நோக்கிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்:
"நாமும் அந்த விண்ணைப் போல்
எட்டாத உயரத்திற்கு
நம் லட்சியத்தை அடைய வேண்டும்" என்று.

பிறகு மரம், செடிகளை ரசித்துக்கொண்டிருந்த போது,
பெரிய சுழற்காற்று வீசியது.
அப்போது உணர்ந்தேன்:
"இந்த மரங்களைப் போன்று,
எந்தக் கஷ்டம், துன்பம், தோல்வி வந்தாலும்,
அவற்றைக் கடந்து செல்ல கற்றுக் கொள்ள வேண்டும்" என்று.

சில நொடிகளில்,
ஒரு இனிமையான குரல் கேட்டது;
அது வேறு யாருமல்ல,
ஒரு சிறிய பறவை.

அப்போது புரிந்தது:
எவ்வளவு கஷ்டம் இருந்தாலும்,
தனிமையில் அல்லாமல்,
இந்தப் பறவையைப் போல
இனிமையுடன் வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு அழகான உண்மைகளைக் கண்டேன் நான்,
என் தனிமைப் பயணத்தில்.

# துணை

கௌரி சின்னா



வாழ்வு துவங்கும் இடம் தாயின் கருவறை
வாழ்க்கைத் துணை அமைவது
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கால இடைவெளியில்
சிலருக்குக் கல்லூரிப் படிப்பு முடிந்த பின்
சிலருக்குப் பள்ளிப் படிப்பு முடிந்த பின்
இன்றும் சிலருக்கோ வாழ்க்கைத் துணை அமைவதே கடினம்

வாழும் போது வாழ்க்கைத் துணையின் அருமை புரியாது
வாழ்வின் ஒரு கட்டத்தில்
துணையை இழந்த பின்
வாழ்க்கைத் துணையின் அருமை புரியும்

வாழ்க்கைத் துணையை நேசி
வாழ்வே ஒளிமயமாகும்
துணை இல்லா வாழ்க்கை
இருள் மிதக்கும் மாயை

இரட்டை மாடுகள் இணைந்தே சென்றால்தான்
பயணம் சிறப்பாக அமையும்
வாழ்க்கைப் பயணம் சிறக்க
ஒன்றாகப் பயணியுங்கள்

என்றென்றும் உங்கள் வாழ்க்கைப் பயணம்
நெடுந்தூரம் இனிமையாகப் போக
பாதை அமையுங்கள் வலிமையாக



FROM

# NIVA GROCERS



**6182, TYLERSVILLE ROAD MASON**

**OHIO - 45040**

**513 - 234 - 0888**

**OPEN 7 DAYS WEEK 11:00 AM 8:00 PM**

# சமத்துவ ஒளி

இங்குறு



வானத்தில் ஒளிருதே விளக்கு,

எண்ணெய் இல்லாம; தருமே

மானிடம் மகிழ்ச்சி, கவலை

இல்லாம.

காதடைக்குமே ஓசை, தாரை

இல்லாம; எம் மக்கள் போற்றுமே

அதை, வாயடைக்காம.

உடுத்துமே புதுத்துணி, பந்தா

இல்லாம; எம் பெண்கள் மிளிருமே

அதில், மை இல்லாம.

கொடுக்குமே இனிப்புகள், குலம்

பார்க்காம; எம் மக்கள் காட்டுமே

சமத்துவம், பகை இல்லாம.

# தீபாவளி வரைபடங்கள்

**சூர்யா செந்தில்குமார்**












# தீபாவளி வரைபடங்கள்- விநாயகர்

ஹரிஷ் இராமநாதன்



# புத்தம் புது காலை

## செல்வி மாந்தீஸ்வரன்



கடல் அலைகள் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு அவள் கால்களை நனைத்தன. பெரிய அலை ஒன்று முன்னால் சென்ற சிறிய அலைகளை முழுங்கி விடுவதைப் போல் ஓடி வந்தது. அட இது என்ன கடலில் எங்கு பார்த்தாலும் தாமரை மலர்கள்!! அதிலும் ஒவ்வொன்றிலும் சக்தியின் முகமே தெரிந்தது. ஆஹா என்ன அற்புதம் என்று மலைத்து பார்த்தாள்.
அம்மா, அம்மா என்று யாரோ அழைப்பது கேட்டது. ஆனாலும் சக்தி அவளின் கனவுலகின் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள்.
அம்மா என்று அவளின் ஐந்து வயது அன்பு மகள் தாரா அவளை உலுக்கியதில் மெல்ல கண் விழித்தாள். அம்மா பசிக்குது, என்று அவள் கேட்டதும் தான் முழுதாக விழித்து தான் எங்கு இருக்கிறோம் என்று புரிந்தது. இன்னொரு பக்கம் அவளின் இரண்டு வயது மகள் ராதா அவளை பார்த்து விழிகளை உருட்டி சிரித்துக் கொண்டு இருந்தாள்.

சக்தி இரண்டு குழந்தைகளையும் அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தாள். அதே அறையில் படுத்திருந்த கணவன் அங்கு இல்லாததை உணர்ந்து, எங்கு சென்று இருப்பான் என்று நினைத்தபடியே குழந்தைகளுக்கு வேண்டிய உணவை அறைக்கு வர வைத்து ஊட்டி முடித்தாள். தானும் உண்ண வேண்டும் என்ற உணர்வின்றி தன் வாழ்க்கையை ஓட்டி பார்த்தாள்.
அன்பு, பாசம் என்ற வார்த்தைகளின் அர்த்தமே தெரியாத சிற்றன்னையின் மேற் பார்வையில் வளர்ந்து, தந்தையின் கண்டிப்பில் பயந்து, கணவன் என்ற அரக்கனின் பிடியில் சிக்கிய சோக வாழ்க்கையில் அவளுக்கு கிடைத்த மாணிக்கங்கள் அவளின் இரண்டு குழந்தைகள் தாராவும், ராதாவும்.

அவளின் கணவன் இந்த ஆறு வருடங்களில் அவளிடம் பேசிய வார்த்தைகளை கோர்த்தால் ஒரு முழம் கூட தேராது. அவளை ஒரு மனுஷியாக கூட மதித்தது இல்லை.
இரண்டு நாட்களுக்கு முன் அவளிடம், என் வியாபாரம் படுத்து விட்டது நாம் வேறு ஊர் சென்று புதிதாக தொடங்க வேண்டும். உன்னுடைய நகைகள் அனைத்தும் எனக்கு தேவை என்று அவளிடம் பெற்றுக் கொண்டான். நாளை நாம் கிளம்பி வேறு ஊர் போகிறோம், எனவே உனக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு தயாராக இரு என்ற கட்டளை மட்டுமே வந்தது. இதோ இந்த ஊருக்கு நேற்று மாலை வந்து, விடுதியில் அறை எடுத்து, உண்டு உறங்கி, விழித்தாகி விட்டது. இனி என்ன? இந்த கேள்வியோடு பிள்ளைகளின் விளையாட்டை ரசித்துக் கொண்டு இருந்தாள் சக்தி. அறையின் கதவைத் தட்டி விடுதியின் மேற் பார்வையாளர் உள்ளே வந்தார். அம்மா, நீங்கள் எப்போது கிளம்பி போகின்றீர்கள் என்றார்.
சக்தி, என் கணவர் வந்ததும் தான் தெரியும் என்றாள்.
ஆனால் அவரோ அம்மா, அவர் காலையில் கிளம்பிவிட்டார். இன்று மாலை வரைக்கும் நீங்கள் இருக்க வாடகை பணமும் செலுத்தி விட்டார். இன்று மாலை நான்கு மணிக்குள் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் கிளம்பலாம் என்று கூறினார்.
என்ன என்று கண்கள் தெறித்து விடும் போல் இருந்தது சக்திக்கு. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, நான் வந்து சொல்கிறேன் என்று அவரை அனுப்பி வைத்தாள்.

# புத்தம் புது காலை

செல்வி மாந்தீஸ்வரன்

உலகமே சுற்றியது போல் இருந்தது அவளுக்கு. அப்படியே தொப்பென்று படுக்கையில் சரிந்தாள். சற்றுத் தெளிந்து, அவளின் நகைப் பெட்டி இருக்கிறதா என்று பார்த்தாள். அதுவும் இல்லை அவள் கணவனின் உடமைகளும் இல்லை. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று புரியவே சில நிமிடங்கள் ஆனது.
மெதுவாக தன்னை நிலைப் படுத்திக் கொண்டு அவளின் கைப்பேசியை எடுத்தாள். அதில் அவள் கணவன் இல்லை அவனை கயவன் என்றே சொல்லலாம். அவளுக்கு ஒரு குறுஞ்செய்தியாக, உன்னுடைய பையில் ரூபாய் பத்தாயிரம் வைத்துள்ளேன். அதை எடுத்துக் கொண்டு நீ எங்கு போக விரும்புகிறாயோ அங்கு போகலாம். இனி உன் வாழ்க்கையில் நான் இல்லை என்று எழுதி இருந்தான்.

அடப் பாவி என்னை நீ வேண்டாம் என்று போகலாம் ஆனால் இந்த இரண்டு தங்க விக்கிரகங்கள் என்ன பாவம் செய்தனர், அவர்களை விட்டு போக எப்படி மனசு வந்தது.
கண்களில் அருவியாக நீர் வழிய ஒன்றும் புரியாமல் அமர்ந்திருந்தாள்.
பின் மெல்ல தன்னை தேற்றிக் கொண்டு அடுத்து என்ன செய்வது என்று யோசித்தாள்.
தந்தையிடம் நிச்சயமாக போக முடியாது. தான் மட்டுமே என்றால் உலகை துறந்து இருக்கலாம். ஆனால் அந்த அன்பு குழந்தைகள் வாழ வேண்டும். அறிவில் சிறந்து பேர் வாங்க வேண்டும். இந்த உலகின் அழகையும், அதிசயங்களையும் அறிந்து அனுபவிக்க வேண்டும். என்ன செய்யலாம் என்று யோசிக்க, யோசிக்க தலை கனத்து வலித்தது.

ஏய் என்னை மறந்து விட்டாயா என்று அவளின் உற்ற தோழி சந்தியா  கண் முன்னே வந்தாள். அவள் திருமணமாகி, கணவருடன் வேறு ஊரில் வாழ்ந்து வந்தாள். அவளிடம் மட்டுமே தன் நரக வாழ்க்கையை பகிர்ந்து இருக்கிறாள்.
அவள் நினைவு வந்ததும் கைப்பேசியில் அழைத்து, தன் அவல நிலையை சொன்னாள். சக்தி உடனே குழந்தைகளுடன் பத்திரமாக ஒரு டாக்ஸியில் கிளம்பி இங்கு வா. மற்றதை நேரில் பேசிக் கொள்ளலாம்.
மலர் கொடி எப்படி ஒரு கொம்பு கிடைத்ததும் பற்றிக் கொள்ளுமோ அப்படி ஓர் பற்றுதல் கிடைத்ததும் தெம்புடன், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று புரிந்தது.

பறவைகள் தங்கள் சிறகை விரித்து பறந்து உணவைத் தேடி தன் குஞ்சுகளுக்கு கொடுத்து அருமையாக வாழ்கிறது. எனக்கு படிப்பு என்ற கவசம் இருக்கிறது. துணைக்கு சந்தியா என்ற அன்பு தோழியும் இருக்கிறாள். இனி என் குழந்தைகளை வழி நடத்த என்னால் முடியும். நான் ஏன் பயந்து வாழ வேண்டும். இத்தனை காலம் தன் சிறகினை கட்டிப் போட்ட கயிறு தானாகவே கழன்று சென்று விட்டது. இனி சுதந்திரமாக பறந்து, உலகை வலம் வர வேண்டும். என் குழந்தைகள் எனக்கு மட்டுமே!  இந்த உணர்வே எவ்வளவு சந்தோஷத்தை தருகிறது. இனி எல்லாம் சுகமே.

with best compliments from

**SURESH DEVANAN**
**President /CEO**



Nish Tech, Inc.

Nish Tech is an Enterprise Digital Technology Agency Specialized in implementing Marketing Technology and eCommerce Solutions.

NISHTECH INC
Perfecting Your Web.

Phone : (513) 469-8500 I Fax : (513) 672-0929
sdevanan@nishtecchinc.com I www.nishtechinc.com

© Copyright 2019 Nish Tech, Inc

# தீபாவளி ஒரு நாஸ்டால்ஜியா

வித்யா சுந்தரராஜன்

**தீபாவளி ஒரு Nostalgia…**

“தீபாவளி”, தீவாளி” ஆக மாறாமல் இருந்தது
ஜவுளி எடுக்கப் பக்கத்து டவுனுக்குச் சென்றோம்
புது துணியின் வாசத்திலேயே பண்டிகை பாதி முடிந்துவிட்டது
தினமலர் தீபாவளிமலருக்காக காத்திருந்தோம்
கோ-ஆப்டெக்ஸ் துண்டு வீட்டுக்கு வந்தது
மருதாணி பறிக்க ஊரெல்லாம் அலைந்தோம்
பேன்சி ஸ்டோர்கள் கல்லா கட்டியது
ஹாப்பி தீபாவளி கலர் கோலம் கண்டிப்பாக இருக்கும்
எல்லா நடிகர்களின் படங்களும் வெளியாகும்
பொங்கலுக்கு மட்டும்தான் வாழ்த்து அட்டை
தீபாவளிக்கு பலகார பரிமாற்றத்தோடு முடித்துக்கொண்டோம்
பட்டாசுப் பையோடு ராத்திரிக்காக காத்திருந்தோம்
வெடிக்காமல் சிதறியவெடிகளை ஒன்றாக்கிப் புதியன செய்தோம்
பண்டிகைக்கு மட்டுமே "க்ளோப் ஜாம்" செய்யப்பட்டது
இட்லியோடு கறிக்குழம்பு கட்டாயம்
விளம்பர இடைவேளைக்கு இடையில் சிறிது புதுப்படம் ஓளிபரப்பப்பட்டது
அடுத்த ஒருவாரம் முறுக்குதான் மூன்று வேளையும்
என்ன மனநிலை என்றே தெரியாத தீபாவளியின் மறுநாள்.
இதில் பாதி உங்களுக்கு தெரிந்திருந்தால்
வாருங்கள் 40+ உங்களை அன்புடன் அழைக்கிறது…
நீங்கள் இனிப்புகளைப் பார்த்தால் மாற்று பாதையில் செல்லவும்!
மற்றவர்க்கு இன்னும் சிலகாலம் இருக்கிறது
அது வரை “க்ளோப் ஜாம்” ரெண்டு அதிகமாக சாப்பிட்டுக் கொள்ளுங்கள்!!

# தீப ஒளி திருநாள்

ஹரிணி இராமநாதன்



# கழனிக்காதல்

சக்தி சந்திரசேகர்



**கழனிக்காதல்...**

காடை தின்னும் காட்டு நரியோ
முதலில் கழுத்தை தானே கவ்வும்!
கண்மையில் மிதக்கும் உன் காந்தக்கண்ணோ
காலங்காத்தால என்னை இழுக்கும்!
சத்தம் போடும் நெஞ்சை சாத்தி வைத்தும் பார்த்தேன்
சாரைப்பாம்பா சீறுதடி சந்தனமே உன் அழகு
மொத்தமும் வேணாம்; உன் நொட்டாங்கை போதும்!
தொட்டதும் இனிக்குதடி; எட்டாம் நாளும் மணக்குதடி!
கம்மா தண்ணி காஞ்சாலும், கருவேல மரம் பூப்பூக்கும்
உன் காது மடல் காத்து போதும்; கடைசி வர என் மூச்சிருக்கும்!

# தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!

பிருந்தா கலையரசன்





தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!

தமிழ் உலகின் பழமையான, செழுமையான மொழிகளில் ஒன்றாகும். அதன் இனிமையும் ஆழமும், உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் இதயத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இன்று அமெரிக்காவிலும் தமிழ் மொழி பரவலாக பேசப்படுகிறது என்பதை பெருமையுடன் கூறலாம். அமெரிக்காவின் பல மாநிலங்களில் உள்ள தமிழ் சங்கங்கள் தமிழின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இவை தமிழ் பள்ளிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், இலக்கிய மற்றும் கலைப் போட்டிகள் மூலம் புதிய தலைமுறைக்கு தமிழின் பண்பாடு மற்றும் மரபை பரிமாறி வருகின்றன. குழந்தைகள் தங்கள் வேரை உணர்ந்து, பெருமையுடன் “நான் தமிழன்” என்று சொல்லும் அளவுக்கு இச் சங்கங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. கடந்த 20 ஆண்டுகளாக, நம் சின்சினாட்டி தமிழ்ச் சங்கம் அதில் ஒன்றாக இருப்பதில் மிகுந்த பெருமை. எங்கள் நோக்கம், தமிழ் மொழியின் அழகையும் அதன் அடிப்படையையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்த்து, எங்கும் தமிழின் குரல் ஒலிக்கச் செய்வதே. ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே இதை இன்னும் உயர்த்த முடியும். அனைவரும் கைகோர்த்து, தமிழின் வளர்ச்சிக்காக ஒன்றாக செயல்படுவோம்! **தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!**

🙏


SAI NAKKA
plumtree REALTOR®
Connecting People With Places they Love
919.802.2291
Sai.Nakka@PlumTreeRealty.com
SaiprasadNakka.PlumTreeRealty.com


Indian Flowers @ Ohio
BY VAAGAI LLC
High Quality Fresh
Flowers from India
EVERY WEEK
in Mason, Ohio
Call/Whatsapp:
Rajini Jeyaprakash
513-237-2486
String Flowers
• Malli (Jasmine)
• Mullai (Jaaji)
• Jaathi Malli
• Kanakambaram
• Kadambam
Loose Flowers
• Malli (Jasmine)
• Mullai (Jaaji)
• Lily (Tube Rose)
• Arali (Ganneru)
• Button Rose
• Marigold
• Lotus
Leaves
• Banana Leaves
• Betel/Paan Leaves
• Mango Leaves
Others
• Pooja Garlands
• Wedding Garlands
• and more...!
Join our
Whatsapp
Group!

# போதை

ரஜினி ஜெயப்பிரகாஷ்



நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றிற்கு அடிமை
காரணம் பெரிதொன்றும் இல்லை அது வெறும் மடமை

எப்படியோ ஒரு பழக்க பற்றில் சிக்கித் தவிக்கிறோம்
மீள முடியாமல் நல்வாழ்க்கையை கெடுத்து கொள்கிறோம்

இதில் சரி இது, தவறு இது என்று ஒன்றுமில்லை
போதை எதன் மீது இருந்தாலும் எல்லாம் தொல்லை

மது கோப்பையில் மிதக்கும் போதை
மாதுவின் மடியில் கிடக்கும் போதை

காதலனின் அன்பு தரும் களங்கமற்ற போதை
காதலியை தொடும் உணர்வில் உண்டாகும் போதை

தொலைக்காட்சி கொடுக்கும் தொடரும் போதை
தொலைபேசி அளிக்கும் அளவற்ற போதை

ஷாப்பிங் செய்வது சிலருக்கு சுகமான போதை
சோற்றின் மேல் பலருக்கு சொர்க்க போதை

சூதாட்டத்தில் வரும் ஜெயிக்கும் போதை
செக்ஸ் தரும் ஆளை சிதைக்கும் போதை


ஆபாச படம் கொடுக்கும் காம போதை
இணையதளம் அளிக்கும் இணையில்லா போதை

பேரும் புகழும் தரும் ஆட்சி போதை
சமூக ஊடகம் வெறும் காட்சி போதை

பணத்தின் மோகம் தரும் பிணத்துக்கும் போதை
பிணமானாலும் போகாது நிலத்தின் மீது போதை

# போதை

ரஜினி ஜெயப்பிரகாஷ்



பெண்ணும் போதை, பொன்னும் போதை
மண்ணும் போதை, காதல் கண்ணும் போதை

ஆணும் போதை, ஆசை வார்த்தையும் போதை
பதவியும் போதை, பேசும் புரளியும் போதை

விக்ஸ் முகர்வது கூட ஒரு பழக்க போதை
கிக்கு எது தந்தாலும் எல்லாம் போதை

மீண்டும் மீண்டும் செய்ய தூண்டுவது போதை
மீளா வேட்கையில் நம்மை சிக்க வைப்பது போதை

இந்த போதைக்கு நாம் அடிமையாவது ஏன்?
தினசரி வாழ்க்கை இதனால் கொடுமையாவது ஏன்?

டோபமைன் செயல் என்று ஆராய்ச்சி சொல்லலாம்
மூளையின் சிக்னல் என்று அறிவியல் கூறலாம்

ஆனால் காரணம் என்னவென்று நீங்கள் சிந்தித்ததுண்டா?
உங்கள் ஆழ்மனதிடம் ஒரு முறையாவது கேட்டதுண்டா?

கேட்ட நொடியில் உரக்க வரும் ஒரு பதில்
உண்மையை தவிர வேறொன்றும் இல்லை அதில்

அனைத்திற்கும் காரணம் உன் மனசு தான்
உன்னை உள்ளிருந்து வழி நடத்தும் "உனக்குள் இருக்கும் நான்"...

# SUBHA TRAVELS

For All Your Travel Needs

Trusted by hundreds of happy travelers worldwide

உங்கள் வெளிநாட்டு பயணம் எளிதாக – சுபாவை அணுகுங்கள்!
அவருடைய அனுபவமும், பயணிகளின் தேவைகளை பொறுப்பாய் கேட்டு அதற்கேற்றபடி சரியான விமானத்தில் உங்கள் பயணத்தை முன்பதிவு செய்ய அவர் அளிக்கும் அறிவுரைகளும் அணுகுமுறையும் உங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.
நல்ல தமிழ் பேசி சுபா , உங்கள் பயணத்தை முன் பதிவு செய்வதை ஒரு திருப்திகரமான அனுபவமாக மாற்றுவார் என்பது அவரது வாடிக்கையாளர்களின் ஒருமித்த கருத்து !

- Domestic & International Flights
- Custom Itineraries
- Group & Family Packages
- Visa Assistance & Travel Insurance

SUBHA TRAVELS

FOR ALL YOUR TRAVEL NEEDS

phone: 630-898-8204 | email: info@subhatravels.com

**With Best Compliments**

plumtree
Real Estate Marketing

- Top 5 Realtor in Cincinnati area
- Top 10% Realtor in all of Ohio 3 years in a row
- Contact me for buying/selling homes, COMMERCIAL or Land

Happy Deepavali



Kishore Kalikiri
M.B.A Finance
Commercial & Residential Realtor
513-602-1633
Kishore1.Realtor@gmail.com
www.plumtreerealty.com